## விண்ணப்பங்கள் கோருவதற்கான அறிவித்தல்

### அரசாங்க சேவை ஆணைக்குழு

### இலங்கை பொறியியலாளர் சேவையின் ஆந் தரத்துடைய உத்தியோகத்தர்களை விசேட தரத்துக்கு I .பதவியுயர்த்தல்

01. இலக்கம் 1836/6 மற்றும் 2013-11-11 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட இலங்கை பொறியியலாளர் சேவைப் பிரமாணக் குறிப்பின் (III) ஆம் அட்டவணையின் 1 ஆம் அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்டள்ள விசேட தரத்துடைய பின்வரும் பதவிகளில் வெற்றிடங்களை நிரப்புவதற்காக அப்பிரமாணக் குறிப்பின் 10.3.1 ஆம் பிரிவுக்கமைய விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதிக்கு தகுதி பெற்ற 1 ஆந் தரத்துடைய உத்தியோகத்தர்களில் பதவிக்குரித்தான குழுவின் கீழ் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

பின்வரும் பதவிகளில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பதவிகளுக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்கு அரசாங்க சேவை ஆணைக்குழுக்கு அதிகாரமுள்ளது.

| தொடரில க்கம் | அங்கீகரிக்கப்பட்ட பதவிகள் | அமைச்சு | பதவி உரித்தாகும் வகுதி | வெற்றிடமான திகதி |
|---|---|---|---|---|
| 1 | மேலதிகசுச் செயலாளர் - (தொழில்நுட்பம்) | நகர அபிவிருத்தி ,நீர் வழங்கல் மற்றும் வீடமைப்பு வசதிகள் அமைச்சு | சகல சிவில் | 2020.04.01 |
| 2 | மேலதிகச் செயலாளர் - ( நகர அபிவிருத்தி) | நகர அபிவிருத்தி ,நீர் வழங்கல் மற்றும் வீடமைப்பு வசதிகள் அமைச்சு | சகல சிவில் | 2020.01.29 |
| 3 | மேலதிககச் செயலாளர் - ( கட்டுமானம்) | நகர அபிவிருத்திநீர் வழங்கல் , வீடமைப்பு வசதிகள் மற்றும் அமைச்சு | சகல சிவில் | 2020.01.10 |
| 4 | மேலதிகச் செயலாளர் – (நீர்ப்பாசன அபிவிருத்தி) | மகாவலி ,விவசாயம் ,நீர்ப்பாசனம் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சு. | சிவில் 03 | 2020.08.24 |
| 5 | மேலதிகச் செயலாளர் – ( நீர் வழங்கல் முகாமைத்துவம்) | மகாவலி ,விவசாயம் ,நீர்ப்பாசனம் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சு. | சிவில் 03 | 2018.07.31 |
| 6 | மேலதிகச் செயலாளர் - பொறியியலாளர் தொழில்நுட்ப ) (சேவை மற்றும் பெறுகை | மகாவலி ,விவசாயம் ,நீர்ப்பாசனம் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சு. | சிவில் 03 | 2019.06.20 |
| 7 | மேலதிகச் செயலாளர் – (நீர் வழங்கல் முகாமைத்துவம்) | மகாவலி ,விவசாயம் ,நீர்ப்பாசனம் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சு. | சிவில் 03 | 2020.04.03 |
| 8 | மேலதிககச் செயலாளர் - ( தொழில்நுட்பம்) | பயணிகள் போக்குவரத்து முகாமைத்துவ அமைச்சு | சிவில் 04<br>02 இயந்திர<br>01 மின் | 2019.01.31 |
| 9 | மேலதிககச் செயலாளர் - (தொழில்நுட்பம்) | உள்நாட்டலுவல்கள் அமைச்சு | சகல சிவில் | 2020.07.14 |
| 10 | பணிப்பாளர் நாயகம் - (பொறியியல்) | கல்வி அமைச்சு | சகல சிவில் | 2018.05.30 |
| 11 | மேலதிகப் பணிப்பாளர் நாயகம் - | அரச தொழிற்சாலை | இயந்திர01 | 2019.05.01 |

| | | | | |
|---|---|---|---|---|
| 12 | மேலதிகப் பணிப்பாளர் நாயகம் - (கட்டுமானம் மற்றும் அபிவிருத்தி) | நீர்ப்பாசனத் திணைக்களம் | சிவில் 03 | 2020.05.18 |
| 13 | மேலதிகப் பணிப்பாளர் நாயகம் - (முறைசார் முகாமைத்துவம்) | நீர்ப்பாசனத் திணைக்களம் | சிவில் 03 | 2020.03.13 |
| 14 | மேலதிகப் பணிப்பாளர் நாயகம் - ( ஆற்று முகாமைத்துவம்) | நீர்ப்பாசனத் திணைக்களம் | சிவில் 03 | 2019.05.05 |
| 15 | மேலதிகப் பணிப்பாளர் நாயகம் – (பொறியியல் சேவை) | கடலோர பாதுகாப்பு மற்றும் கடலோர வள முகாமைத்துவத் திணைக்களம் | சிவில் 05 | 2019.11.03 |
| 16 | மேலதிக பொது முகாமையாளர் (உட்கட்டமைப்பு வசதிகள்) | புகையிரத திணைக்களம் | சிவில் 04 | 2019.02.01 |
| 17 | மேலதிக பொது முகாமையாளர் - ( இயந்திர) | புகையிரத திணைக்களம் | இயந்திர 02 | 2020.05.04 |
| 18 | பிரதிப் பிரதம செயலாளர் - ( பொறியியல் சேவை) | மத்திய மாகாண சபை | சிவில் 07 | 2018.10.12 |
| 19 | பிரதிப் பிரதம செயலாளர் - ( பொறியியல் சேவை) | வட மத்திய மாகாண சபை | சிவில் 07 | 2018.10.12 |
| 20 | பிரதிப் பிரதம செயலாளர் - ( பொறியியல் சேவை) | மேல் மாகாண சபை | சிவில் 07 | 2018.10.12 |
| 21 | பிரதிப் பிரதம செயலாளர் - (பொறியியல் சேவை) | சப்ரகமுவ மாகாண சபை | சிவில் 07 | 2019.03.29 |
| 22 | பிரதிப் பிரதம செயலாளர் - (பொறியியல் சேவை) | தென் மாகாண சபை | சிவில் 07 | 2018.10.12 |
| 23 | பிரதிப் பிரதம செயலாளர் - ( பொறியியல் சேவை) | ஊவா மாகாண சபை | சிவில் 07 | 2019.10.28 |

❖ **குறிப்பு**

விண்ணப்பதாரி பதவிகள் பலவற்றிற்கு விண்ணப்பதாயின், விசேட தரத்தின் பதவிகள் அதிகபட்சம் 05 இற்கு விண்ணப்பதாரியின் விருப்ப ஒழுங்கிற்கு ஏற்ப உள்ளடக்குதல் வேண்டும்.

நேர்முகப் பரீட்சையின் போது தகைமைகள் பரீட்சிக்கப்படுவது விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதியிலாகும்.

02. விசேட தரத்துக்கு பதவியுயர்த்தப்படுவதற்கு முழுமைப்படுத்தியிருக்க வேண்டிய தகைமைகள்

I. இலங்கை பொறியியலாளர் சேவையின் முதலாம் தரத்தில் ஐந்து (05) வருடங்களுக்கு முனைப்புடனானதும் திருப்திகரமானதும் சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் மற்றும் I ஆந் தரத்திற்கு பதவியுயர்த்தப்பட்டதன் பின்னர் ஐந்து (05) சம்பள ஏற்றங்களை உழைத்திருத்தல்.

II. பதவியுயர்விற்கான தகைமை பெறும் திகதிக்கு இலங்கை பொறியியலாளர் சேவையில் 18 வருடங்களுக்குக் குறையாத முனைப்புடனான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.

III. பதவியுயர்விற்கான தகைமை பெறும் திகதிக்கு உடன்முன்னரான ஐந்து (05) வருடங்களினுள் வருடாந்த செயலாற்றுகை திருப்திகரமான அல்லது அதற்கு மேற்பட்ட அளவில் இருத்தல்.

IV. பதவியுயர்விற்கான தகைமை பெறும் திகதிக்கு உடன்முன்னரான ஐந்து (05) வருடங்களினுள் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பெற்றிருத்தல் மற்றும் ஒழுக்காற்று தண்டனைக்கு உட்படாதிருத்தல்.

V. **(அ.)** இலங்கை பொறியியலாளர் நிறுவனத்தின் அதிஉயர் அங்கத்துவத்தைப் பெற்றிருத்தல் அல்லது இலங்கை பொறியியலாளர் நிறுவனத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய பொறியியலாளர் நிறுவனத்திலிந்து பெற்றுக்கொள்ளப்பட்ட அதற்குச் சமனான அதிஉயர் அங்கத்துவத்தினைப் பெற்றிருத்தல். இங்கு பட்டயப் பொறியியல் நிலையடைந்த பொறியியல் துறையில் அதிஉயர் அங்கத்துவத்தைப் பெற்று அவ்வங்கத்துவத்தினை தொடர்ச்சியாக பேணிச் செல்வது கட்டாயமான தேவையாகும்.

அல்லது

**(ஆ.)** 09 மாதங்களுக்குக் குறையாத பாடநெறிக் காலத்துன் பொறியியல் துறையில் பட்டப் பின் பட்ட டிப்ளோமா / பட்டப் பின் பட்ட தகைமையைப் முழுமைப்படுத்தியிருத்தல் அல்லது முகாமைத்துவ துறையில் அல்லது வணிக நிர்வாகம் தொடர்பான பட்டப் பின் பட்டச் சான்றிதழைப் பெற்றிருத்தல் அத்துடன் பட்டய பொறியியல் நிலையை தொடர்ச்சியாக பேணிச் சென்றிருத்தல்.

❖ ***<u>குறிப்பு</u>***

i. இலங்கை பொறியியல் நிறுவனம் தவிர்ந்த வேறு நிறுவனமொன்றின் அதிஉயர் அங்கத்துவத்தைப் பெற்றிருப்பின், அந்நிறுவனம் இலங்கை பொறியியலாளர் நிறுவனத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் என உறுதிப்படுத்தப்பட்ட கடிதத்தை சமர்ப்பித்தல் வேண்டும்.

ii. அதிஉயர் அங்கத்துவத்தை வழங்கிய சான்றிதழின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதியை சமர்ப்பித்தல் வேண்டும்.

iii. அதிஉயர் அங்கத்துவத்தை தொடர்ச்சியாக பேணிச் செல்வதாக உறுதிப்படுத்தப்பட்ட கடிதத்தை சமர்ப்பித்தல் வேண்டும்.

iv விண்ணப்பதாரிகள் மேற்படி சகல தகைமைகளையும் விண்ணப்பம் கோரப்படும் இறுதித் திகதிக்கு சகல விதத்திலும் முழுமைப்படுத்தியிருத்தல் வேண்டும்.

03. பதவியுயர்த்தப்படும் முறை

3.1 அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைச் சபையினால், தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள உத்தியோகத்தர்கள் நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்பட்டு சேவைக் காலம் மற்றும் திறமைகள் கவனத்திறக் கொண்டு நிலவுகின்ற வெற்றிட எண்ணிக்கைக்கு ஏற்ப விசேட தரத்திற்கு பதவியுயர்த்தும் நடவடிக்கை அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்படும்.

3.2 நேர்முகப் பரீட்சையின் புள்ளி வழங்கும் நடைமுறை பின்வருமாறு அமைந்துள்ளது.

**(அ) சேவை மூப்புநிலை - ( அதிகபட்சம் 60 புள்ளிகள் )**

இலங்கை பொறியியலாளர் சேவையில் முனைப்பான 18 வருட சேவைக் காலம் மற்றும் I ஆந் தரத்தில் 5 வருட முனைப்புடனான சேவைக் காலத்தின் பின்னர் தொடரும் ஒவ்வொரு வருடத்திலும் ஒரு வருடத்திற்கு 06 புள்ளிகள் வீதமும், 6 மாதங்களுக்குக் குறையாத காலத்திற்கு 03 புள்ளிகள் வீதமும், 3 மாதங்களுக்குக் குறையாத காலத்திற்கு 1.5 புள்ளிகள் வீதமும் புள்ளிகள் வழங்கப்படும். ( சேவை மூப்புநிலையின் கீழ் புள்ளிகள் வழங்கப்படும் போது சேவைக் காலத்தைக் கருத்திற் கொள்ளப்படுவது நிரந்தர சேவையில் நியமிக்கப்பட்டள்ள அல்லது நிரந்தர சேவையில் உள்ளீர்க்கப்பட்ட திகதி முதலாகும்.)

**(ஆ) திறமை ( அதிகபட்சம் 40 புள்ளிகள்)**

***(ஆ. 01) புத்தாக்கம் மற்றும் ஆக்கத்திறன் (Innovativeness and Creativity) - 10 புள்ளிகள்***

*நிறுவனத்தின் மற்றும் சேவையின் தரம் மற்றும் பயனுறுதித் தன்மையை மேம்படுத்துவதற்காக விண்ணப்பதாரியினால் வெற்றிகரமாக செயற்படுத்தியுள்ள, ஒரு நிகழ்ச்சித்திட்டம் / செயற்திட்டத்திற்காக 2.5 புள்ளிகள் வீதமும், நிகழ்ச்சித்திட்டங்கள் / செயற்திட்டங்கள் 04 இற்கு அதிகபட்சம் 10 புள்ளிகளும் வழங்கப்படும்.*

❖ *குறிப்பு*

*(அ) விண்ணப்பதாரியின் கடந்த 05 வருடத்தின் செயலாற்றுகை அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு மேற்படி, நிகழ்ச்சித்திட்டங்கள்/ செயற்திட்டங்கள் இனங்காணப்படும்.*

*(ஆ) விண்ணப்பதாரர்கள் வெற்றிகரமாக முடிந்ததை உறுதிப்படுத்தும் எந்தவொரு விருதுகள், பாராட்டுக்கள் அல்லது சான்றிதழ்களை நேர்முகப் பரீட்சையில் வழங்க வேண்டும்.*

*அல்லது*

*(இ) மேற்படித் திட்டங்களை செயற்படுத்தியதாக உறுதிப்படுத்த முடியுமான சான்றிதழ் / புகைப்படங்கள் / வடிவமைப்புக்கள் / திட்ட வரைபுகள் / தொழில்நுட்ப அறிக்கை அல்லது ஏனைய கடித ஆவணங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.*

***(ஆ .02) தொழில் நிபுணத்துவம் ( அதிகபட்சம் 15 புள்ளிகள் )***

*இலங்கை பொறியியலாளர் சேவையின் உத்தியோகத்தராக III ஆந் தரம் முதல் விசேட தரம் வரை பதவியுயர்த்தப்படும் போது பல்வேறு பொறியியல் துறைகளில் பெற்ற பொறியியல் சார்ந்த நிபுணத்துவம் இங்கு பரீட்சித்துப் பார்க்கப்படும்.*

*(அ) பொறியியல் சார்ந்த விசாரணைகள்/ ஆராய்ச்சி / வடிவைமைப்பு மற்றும் திட்டமிடல்*
*(Engineering Investigation/ Research/ Design & Planning)*

*(ஆ) பொறியியல் சார்ந்த கட்டுமானங்கள் மற்றும் நிர்மாணப் பணிகளின் விருத்தி*
*(Implementation of Engineering Construction & Development)*

*(இ) பொறியில் சார்ந்த சேவைகள் / பராமரிப்புக்கள்/ செயற்பாட்டு மற்றும் அமைப்பு / செயற்திட்ட முகாமைத்துவம்*
*(Engineering Services/Maintenance/Operation & System/Project Management)*

*மேற்படி (அ), (ஆ) மற்றும் (இ) இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள ஒரு செயற்பாட்டில் அதிகபட்சம் 03 வருடங்களுக்கான புள்ளிகள் 05 வீதம் என்றவாறு பின்வரும் செயற்பாடுகள் மூன்றிற்கும் 15 புள்ளிகள் வழங்கப்படும். அச் செயற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்பட்டதாக உறுதிப்படுத்த முடியுமான வகையில் சான்றிதழ் /புகைப்படங்கள் / வடிவமைப்புக்கள் / திட்ட வரைபுகள் / தொழில்நுட்ப அறிக்கை அல்லது ஏனைய கடித ஆவணங்களை சமர்ப்பித்தல் வேண்டும்.*

***(ஆ. 03) பவர் பொயின்ட் காட்சியளிப்பு (Power Point Presentation) 10 புள்ளிகள்***

*மேற்படி (ஆ 01) மற்றும் (ஆ 02) இற்கு உரிய செயற்திட்டம் / நிகழ்ச்சித்திட்டம் தொடர்பாக கணனி சார்ந்த (Power Point) காட்சியளிப்பைத் தயாரித்து 10 நிமிடங்களுக்கு அளிக்கை செய்தல்.*

| | | |
|---|---|---|
| *i.* | *இலக்குகள் மற்றும் தொலைநோக்கு (Objectives and Vision)* | *02 புள்ளிகள்* |
| *ii.* | *இயைபுடமை (Relevancy)* | *02 புள்ளிகள்* |
| *iii.* | *ஆக்கத்திறன் (Creativity)* | *02 புள்ளிகள்* |
| *iv.* | *நேர முகாமைத்துவம் (Time Management)* | *02 புள்ளிகள்* |
| *v.* | *ஏனைய மொழித் தேர்ச்சி* | *02 புள்ளிகள்* |

❖ *குறிப்பு*

*(அ) மேற்படி தேர்வளவுகளின் கீழ் புள்ளிகள் வழங்க முடியுமாக இருப்பது விண்ணப்பதாரி இலங்கை பொறியியலாளர் சேவையில் இணைத்துக் கொள்ளப்பட்ட மொழிக்கு மேலதிகமாக அரசகரும மொழி / இணைந்த மொழியின் மூலம் அளிக்கை செய்யப்படுமாயின் மாத்திரமாகும்.*

*(ஆ) இம்முன்னளிப்பின் பின்னர் நேர்முகப் பரீட்சைக் குழுவினால் 05நிமிடங்களுக்கு விண்ணப்பதாரியிடம் கேள்விகள் கேட்கப்படும் .*

*(இ) அளிக்கை செய்வதற்கு உரித்தான வன்பிரதி நேர்முகப் பரீட்சைச் சபைக்கு அச்சந்தர்ப்பத்தில் சமர்ப்பித்தல் வேண்டும். மேலதிகமாக ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்டு முன்னளிக்கப்பட்ட காட்சியளிப்பின் வன்பிரதியையும் அச்சந்தர்ப்பத்தில் சமர்ப்பிப்பது கட்டாயமானதாகும்.*

***(ஆ. 04) நேர்முகப் பரீட்சையில் காட்டும் திறன்கள் - 05 புள்ளிகள்***

*மேற்படி முன்னளிப்பின் பின்னர் நேர்முகப் பரீட்சைக் குழுவினால் முன்வைக்கப்படும் பிணக்குகளுக்கு ஏற்புடையதாக பின்வரும் விடங்களின் கீழ் விண்ணப்பதாரிகளுக்கு அதிகபட்சம் 05 புள்ளிகள் வழங்கப்படும்.*

| | | |
|---|---|---|
| *i.* | *தலைமைத்துவம் (Leadership)* | *01 புள்ளி* |
| *ii.* | *தொடர்பாடல் திறமை (Communication Skills)* | *01 புள்ளி* |
| *iii.* | *தன்னம்பிக்கை (Confidence)* | *01 புள்ளி* |
| *iv.* | *முடிவெடுக்கும் திறன் மற்றும் விவேகம் (Analytical Thinking)* | *01 புள்ளி* |
| *v.* | *தொழில்சார் நெறிமுறை (Professional Courtesy)* | *01 புள்ளி* |

❖ *குறிப்பு*

*நேர்முகப் பரீட்சையின் போது அத்திறமைகளை உறுதிப்படுத்தும் கடித ஆவணங்களை சமர்ப்பித்தல் வேண்டும் என்பதோடு சேவை அனுபவத்தை உறுதிப்படுத்தும் கடிதங்களின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகளை அத்துடன் முன்வைத்தல் வேண்டும்.*

*04. விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதிக்கு தகைமையை பூர்த்தி செய்துள்ள உத்தியோகத்தர்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவத்தின் படி நிரப்பிய விண்ணப்பத்தை அமைச்சுக்களின் செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள் ஊடாக அரச சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளருக்கு* **2020.12.18** *ஆந் திகதிக்கு முன்னர் பதிவுத் தபாலில் அல்லது நேரடியாக வருகை தந்து கையளிக்க முடியும். அத்திகதியின் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் எவ்வித காரணமும் இன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது என்பதுடன் பிழையான தகவல்கள் மற்றும் முழுமையற்ற விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.*

*05. மேற்படி அடிப்படை தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள உத்தியோகத்தர்கள் மாத்திரம் விண்ணப்பங்களை அனுப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் என்பதோடு, விண்ணப்பங்கள் அனுப்பியுள்ள அடிப்படை தகைமைகளை முழுமைப்படுத்தியுள்ள உத்தியோகத்தர்கள் மாத்திரமே நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள்.*

*"அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளைப் பிரகாரம்,"*

*ஜே.ஜே. ரத்னசிரி*
*செயலாளர்*
*அரச சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு*
*2020.11.12*